வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 197 of 2015

வழக்கு சாட்சி - PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பொருட்செல்வன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09.03.2026.

(எதிரிகள் ஆஜர்).

**<u>முதல் விசாரணை</u> :**

1) நான் தற்போது குமரலிங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.10.2014 ஆம் தேதி பல்லடம் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காவலர் 1786 திரு.கண்ணன் என்பவர் 21.10.2014 ஆம்தேதி 13.00 மணிக்கு நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது மயில்வாகனம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண்825 /2014 பரிவுகள் 457,380 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரனைக்காக எனது பார்வைக்கு வைத்தார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.2** ஆகும்.

2) வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 14.00 மணிக்கு வாதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் முகமது ரபீக் மற்றும் முகமது சபீக் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அவை முறையே **அ.த.சா.ஆ. 3 மற்றும் 4 ஆகும்.**

3)சாட்சிகள் மயில்வாகனம், சந்திரமதி, நல்லதம்பி, முகமது ரபீக் மற்றும் முகமது சபீக் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். தற்போது அவர் இறந்துவிட்டதால் அவருடன் பணியாற்றியதால் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் ஆகையால் காவல் நிலைய கோப்பினை பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

4) காவல் ஆய்வாள்ர திரு. சுப்பிரமணியம் 27.11.2014 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு அறிவொளி நகர் தொட்டி அப்புச்சி கோவில் பஸ் ஸ்டாப் அருகில் குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளை கண்டுபிடிக்க வேண்டி காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் சகிதம் கண்காணித்துக் கொண்டிருந்தபோது பின்னர் பெயர் விலாசம் தெரிந்த கார்த்திக் த/பெ.மருதையன் அறிவொளி நகர் பல்லடம் என்பவர் தனது இடது பக்க தோல்பட்டையில் ஒரு பேட்டிரியை துாக்கி கொண்டும், அவருக்கு பின்னால் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து நாகேந்திரன் த/பெ.மோகன் குமார் என்பவர் பேசிக்கொண்டும் அறிவொளி நகர் பக்கத்தில் இருந்து தொட்டி அப்புச்சிகோவில் நோக்கி வந்துக்கொண்டிருந்தவர்கள் போலீசாரை காண்டவுடன் பேட்டரியை கீழே போட்டுவிட்டு எதிரி நாகேந்திரன் என்பவருடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க இருவரும் பல்லடம் காவல் நிலைய சரக திருட்டு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தெரிந்து அவர்களை விசாரிக்க அவர்கள் இருவரும் தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டவர்களை விசாரிக்க எதிரிகளில் எதிரி நாகேந்திரன் என்பவர் அவருடைய இடுப்பில்ஒரு பிளாஸ்டிக் கவரில் மூன்று செல்போன்கள் வைத்திருந்தார்.

5)மேற்படி செல்போன் மற்றும் பேட்டரி சம்மந்தமாக விசாரித்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப்பிரிவு 457,380 இதச மற்றும் பல்லடம் காவல் நிலைய

குற்ற எண் 825/2014 சட்டப்பிரிவு 457,380 இதச வழக்குகளில் சம்மந்தப்பட்டிருப்பது தெரியவந்து காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து கைது செய்து ஆஜர் சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோர் முன்னிலையில் 1 ஆம் எதிரி கார்த்திக் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நோக்கியா கருப்பு மற்றும் பிரவுன் கலர் செல்போன் ஒன்று மற்றும் Hello city என்று எழுதப்பட்ட வெள்ளை கருப்பு கலர் என்ற நோக்கியா செல்போன் ஒன்று , மஞ்சள் மற்றும் கருப்பு Hello city என்று எழுதப்பட்ட செல்போன் ஒன்று கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த மூன்று செல்போன்கள் **அ.சா.பொ.1** ஆகும்.

6) எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5.** ஆகும். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ. 6** ஆகும். எதிரிகளை மற்றும் வழக்கு சொத்துடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ. 7** ஆகும். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 457,380 இதசவின் பிரிவில் குற்றப்பத்திரக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால்

சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் பொருட்களும் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.09 18:07:39 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.